1970 மார்ச் 3]

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை கேந்திரம்

* 185 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை கேந்திரம் கட்டி முடித்தாகி விட்டதா?

(இ) இல்லை எனில், காரணம் என்ன?

(உ) எப்போது கட்டிமுடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) 29-6-1965-ல் கட்டிடம் கட்டி முடிவுற்றது. 30-6-1965-ல் அது கால்நடை துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம் உடன்குடி ஊராட்சி ஒன்றியம், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பண வசதி இல்லாத காரணத்தினால் இதுபோன்ற கட்டிடங்கள் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டு, அங்குள்ள ஆசிரியர்களுக்கும் எப்போது சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டபோது கமிஷன் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படிக் கமிஷன் அமைக்கப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிட்டதாக? உடனடியாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது திருச்செந்தூர் கால்நடை கேந்திரத்தைப்பற்றிய கேள்வி. திருச்செந்தூர் முருகனிடத்தில் செல்கிற பக்தர்கள் பல்வேறு கோரிக்கைகளை ஒரே சமயத்தில் வைப்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் ஒன்றிலிருந்து ஒன்றாக பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர் குறிப்பிடுகிற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Strike by employees of Ramanathapuram Municipality

* 186 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the employees of the Ramanathapuram Municipality had gone on strike about the 1st July, 1969; and

(*b*) if so, the details thereof

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 28-6-69 அன்று இரவு, இராமநாதபுரம் நகராட்சி துப்புரவு [illegible]டுநர் (Sanitary Inspector) பணியில் இருந்தபோது சிலரால் தாக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி குறித்து விசாரணை நடத்துமாறு கோரி துப்புரவு பணியாளர்கள் உட்பட நகராட்சி ஊழியர்கள்

29-6-69 அன்று ஒருங்குதிரண்டு ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அதற்கு மறுநாள், துப்புரவுப் பணியாளர்கள் உட்பட பணியாளர்களில் பெரும்பாலோர், தனிப்பட்ட காரணங்களுக்காகவும் உடல் நலமின்மை என்ற காரணங்களுக்காகவும் பெருமளவில் விடுப்புக்கு விண்ணப்பித்துக் கொண்டனர்.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர்: தலைவர் அவர்களே, முனிசிபல் ஊழியர்கள் கட்டுப்பாடாக இம்மாதிரி விடுப்பு எடுத்ததற்கு சரியான நடவடிக்கை எடுப்பதோடு, அவர்களுக்கு இருக்கிற குறைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியின் அடிப்படை, பணியாளர் ஒருவர் தாக்கப்பட்டதுபற்றி. அவர்கள் தங்களுக்கு இருக்கும் குறைகளின் அடிப்படையில் விடுப்பு எடுக்கவில்லை. தாக்கப்பட்ட அதிகாரி புகார் மனு கொடுத்ததன் பேரில் வழக்கு மன்றத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் இவர்களுக்குள் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டு, துணை மாஜிஸ்ட்ரேட் அவர்கள் வழக்கில் முடிவு கண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், நகராட்சி ஆணையாளரும் நிலைமைகளை ஆராய்ந்து இப்படிப்பட்ட குறைகள் நிகழாவண்ணம் எச்சரிக்கை கொடுத்து, இப்போது இயல்பாகக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, அந்த அதிகாரி தாக்கப்பட்டது, தனிப்பட்ட காரணங்களுக்காகவா? நகராட்சிப் பணியினைச் செய்யும்போது அவர் தாக்கப்பட்டாரா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, 'பணியில் இருந்தபோது தாக்கப்பட்டார்' என்று நான் என்னுடைய பதிலிலேயே குறிப்பிட்டேன். என்ன காரணங்களுக்காக அவர் தாக்கப்பட்டார் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. அவர் கொடுத்த புகாரின் மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Temporary casual workers of Electricity Board

* 187 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the benefits to be given to the Temporary Casual Labour workers of operation, maintenance have been implemented as per the agreement entered in 1967 between the workers and the Board; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) 1967-ஆம் ஆண்டில் அப்படி யாதொரு ஒப்பந்தமும் பதிவு பெறவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.